004.07 F16

சிலாபக் கல்வி வலயத்திலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் க.பொ.த (சா/த) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தின் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான ஆய்வு

# A STUDY TO IMPROVE THE RESULTS OF THE INFORMATION & COMMUNICATION TECHNOLOGY SUBJECTS IN THE G.C.E (O/L) OF THE TAMIL MEDIUM SCHOOLS IN CHILAW EDUCATION ZONE

பதுருஸ்ஸமான் முஹமட் பர்ஷான்

**BADURUSSAMAN MOHAMED FARZAN**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினல் நடாத்தப்படும் கல்வி முதுமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான பகுதித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது.

OPEN UNIVERSITY
71225

71225

# ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வு சிலாபக்கல்வி வலயத்திலுள்ள தமிழ் மொழி மூலப்பாடசாலைகளின் க.பொ.த (சா/த) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப்பாடத்தின் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான தேவையைப் புலப்படுத்துகின்றது. இது சிலாபக்கல்வி வலயத்திலுள்ள சிங்கள, தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாய்வில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களுமாக மொத்தம் நூற்று அறுபத்து ஏழு நபர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். க.பொ.த (சா/த) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாட அடைவின் பெறுபேறுகளுக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்ற போதும் மட்டுப்படுத்தப்பட்ட நேர அவகாசத்தைக் கருத்திற்கொண்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடம் தொடர்பான மனப்பாங்கு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தினைக் கற்பதில் உள்ள ஆர்வம் எனும் மாணவர்களது தனியாள் காரணிகள் ஆசிரியர்களின் கணினி, தொழில்நுட்ப அறிவு, ஆசிரியர்களின் கற்பித்தல் பாங்கு, அதிபரின் தலைமைத்துவம் எனும் பாடசாலைக் காரணிகள், மாணவர்களது வீட்டுச் சூழல், குடும்ப அங்கத்தவர்களது கணினி தொடர்பான அறிவுமட்டம், வீட்டில் கணினி, தொழில்நுட்ப வசதி போன்ற குடும்பக் காரணிகள் மாத்திரமே இவ்வாய்வில் இணைத்துக் கொள்ளப்பட்டன.

மேலும் தெரிவு செய்யப்பட்ட மாறிகள் தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்காக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டதுடன் பெற்றோர்களுடன் நேர்காணலும் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் மூலம் கிடைக்கப் பெற்ற தகவல்கள் அனைத்தும் தொகைரீதியான தரவுகளாக மாற்றியமைக்கப்பட்டு t-பரிசோதனையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன. அத்துடன் இங்கு எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை சமனின்மையால் equal variances and unequal sample size இற்குரிய t-பரிசோதனைச் சமன்பாடு பயன்படுத்தப்பட்டது. மேலும் மாற்றுக் கருதுகோள்களைக் கண்டறிவதற்காக ஒரு வால் (one-tailed) சோதனையினைப் பயன்படுத்தி தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் தரவுகளும், சிங்களமொழி மூலப் பாடசாலைகளின் தரவுகளும் ஒப்பிடப்பட்டன. இதற்காக மின்னணுசார் விரிதாள் என்னும் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மென்பொருளைப் பயன்படுத்தப்பட்டது.

மேலும் t-பரிசோதனையானது parametric test வகையைச் சார்ந்ததால் ஆய்கருவிகள் மூலம் பெற்றுக்கொண்ட தரவுகள் செவ்வன் பரம்பலில் உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு Minitab என்னும் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மென்பொருளில் Normal Probability Plot என்னும் வரையியல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

// ABSTRACT

This study depicts the need of improving the results of the Information and Communication Technology subject in the G.C.E (O/L) of the Tamil medium schools in Chilaw education zone. This is based on Sinhala and Tamil medium schools in the zone. One hundred and sixty seven persons including the principals, teachers, students and the parents of the selected schools on this research are used for the study. Though there are several factors influencing in the progress of the Information and Communication Technology subject in the G.C.E (O/L), only the personal factors consist of attitude of the students towards the Information and Communication Technology subject and the keenness of the students on studying the Information and Communication Technology subject, the school factors consist of knowledge on computer and technology of the teacher, way of teaching of the teacher and the leadership of the principal and the family factors consist of home environment of the students, level of knowledge on computer of the family members and the facility of computer and technology in home were used where time was limited.

Further to collect data of the selected variables the questionnaires were given for the students, teachers and principal and interviews were conducted for the parents. All the collected data were changed as quantitative data and analyzed using the t-test method. Since the selected variables were not equal t-test formula for equal variance and un-equal sample size was used. By using the one-tailed test the data of the Tamil medium schools and the data of Sinhala medium schools were compared to find alternative hypothesis. The spread sheet software was used for the above purpose.

The t-test was related to parametric test so to confirm the data which were collected by the research tools were whether in the normal distribution, the Normal Probability Plot of the statistic analysis software called Minitab was used.

The conclusions of the study were compared with the studies of other researchers. The teachers of Information and Communication Technology in the Tamil medium should take the teachers of the Information and Communication Technology in Sinhala medium as role models, by teaching there subject with interest and satisfaction, the effective supervision of the school principal and through providing advices and guidance the progress of the results of the Information and Communication Technology subject could be enhanced.

Further the ideas to enhance the progress of the results were put forward to the students, teachers, principals, parents and to the zonal director of education of the respective zone.

ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகள் ஏனைய ஆய்வாளர்களின் ஆய்வுகளுடன் ஒப்பிடப்பட்டன. தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களது முன்மாதிரியைப் பின்பற்றுவதுடன் அவர்கள் தாம் கற்பிக்கும் பாடத்தினை விருப்பத்துடன் ஈடுபாட்டுடனும் கற்பிப்பதினூடாகவும், பாடசாலை அதிபர்கள் தமது கற்பித்தல் மேற்பார்வைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதினூடாகவும், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங்குவதினூடாகவும் இப்பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப்பாடத்தின் பெறுபேறுகளை மேம்படுத்தலாம்.

மேலும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர், வலயக் கல்விப் பணிப்பாளர் போன்றவர்களுக்கும் தமிழ் மொழி மூலப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.